32. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய் எது?

(1) செங்கண்மாரி (2) நீர்வெறுப்பு நோய் (3) யானைக்கால் நோய்

[பக். 6 ஐப் பார்க்க

www.tkedu.lk

33. நான்கு இதழ்கள் உள்ள பூவிற்கு ஓர் உதாரணம்

(1) செவ்வரத்தம் பூ (2) நாகமரப் பூ (3) திருக்கொன்றைப் பூ

34. ஒருவர் மயக்கமடைந்து விட்டால் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன?

(1) குளிர்ந்த நீரைப் பருகக் கொடுத்தல்

(2) வாயினுள் உலோகக் கரண்டியை வைத்தல்

(3) நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்

35. நிலத்தில் வளரும் தாவரமொன்று நீரையும் பசளையையும் பெறுவது எதனால்?

(1) வேர்களினால் (2) இலைகளினால் (3) பூக்களினால்

36. விவசாயிகளின் நண்பன் என அழைக்கப்படும் பிராணி

(1) செவ்வெறும்பு (2) கறையான் (3) மண்புழு

37. காபோவைதரேற்று அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவுப் பொருள்

(1) பூசணிக்காய் (2) பலாக்காய் (3) சோயா அவரை

38. போலியான, தரக்குறைவான பண்டங்கள், சேவைகள் விற்பனை செய்யப்படுகின்றனவாயின் அவை குறித்து அறிவிக்க வேண்டியது

(1) நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு

(2) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு

(3) இலங்கைக் கட்டளைகள் பணியகத்துக்கு

39. இலைக்கஞ்சி தயாரிக்கும்போது போசணைத் தன்மைக்குத் தீங்கு ஏற்படுத்தும் சந்தர்ப்பம்

(1) இலைகளை நன்றாகச் சுத்தம் செய்து நன்கு இடித்தல்

(2) போசணைத் தரமுடைய அரிசி வகையொன்றினைத் தெரிவு செய்தல்

(3) கஞ்சியை அதிக நேரம் வேக வைத்து பச்சை நிறம் மாறும் வகையில் தயாரித்தல்

40. மக்கள் மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்ப்பதற்காக அரும்பாடுபட்டவர்

(1) வண. எஸ். மஹிந்த தேரர்

(2) கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா

(3) கலாநிதி ரீ.பீ. ஜாயா

41. ஓர் இருட்டான இடத்தைத் தயார்செய்து அதில் புவிக்கோள மாதிரியுருவை வைத்து, ஒரு புறத்தேயிருந்து மின்சூள் ஒளியை அதன் மீது பாய்ச்சி செய்யப்படும் இப்பரிசோதனையிலிருந்து எதிர்பார்க்கப்படுவது



(1) புவி சுழல்வதனால் இரவு, பகல் ஏற்படுகின்றது என்பதை அறிதல்

(2) சூரியன் சுழல்வதனால் இரவு, பகல் ஏற்படுகின்றது என்பதை அறிதல்

(3) சந்திரன் சுழல்வதனால் இரவு, பகல் ஏற்படுகின்றது என்பதை அறிதல்

42. மனிதன் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தும் நவீன முறைகள் இரண்டு எவை?

(1) கூக்குரலிடலும் தீக்குவியல் மூட்டலும்

(2) முரசறைதலும் ஈட்டியில் செய்தியை இணைத்து அனுப்புதலும்

(3) மின்னஞ்சலும் தொலைபேசியைப் பயன்படுத்தலும்

[பக். 7 ஐப் பார்க்க

www.ikedu.lk

43. வித்துக்களைப் பரப்பி தாவரங்கள் பெருக்கமடைய உதவும் விலங்கு

(1) ஆந்தை (2) வௌவால் (3) கொக்கு

44. பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிகள் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ள ஒரு தரப்பினர் யாவர்?

(1) வயோதிபர்கள் (2) நோயாளிகள் (3) அங்கவீனர்கள்

45. நீராவியில் அவிப்பதனால் தயாரிக்கப்படும் உணவு வகை எது?

(1) அப்பம் (2) இடியப்பம் (3) ரொட்டி

46. தேசப் படமொன்றில் அதிவேகப் பாதையைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் யாது?

(1) கறுப்பு (2) சிவப்பு (3) ஊதா

47. நாம் செய்யத்தக்க நேர் வகையான மாற்றம் பின்வருவனவற்றுள் எது?

(1) காலையில் நித்திரை விட்டெழுந்தவுடன் படுக்கையை ஒழுங்குபடுத்தாதிருத்தல்

(2) அசுத்தமாகக் காணப்படும் வகுப்பறையைச் சுத்திகரித்து நேர்த்தியாக்குதல்

(3) உணவு உட்கொண்ட பின்னர் பாத்திரங்களைக் கழுவிச் சுத்திகரிக்காது உரிய இடத்தில் வைத்தல்

48. நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் சமயத்தவர்

(1) கிறிஸ்தவர்கள் (2) இஸ்லாமியர்கள் (3) பௌத்தர்கள்

49. 'நீர்வெருளி' ஒழுங்கமைப்பு யாருக்குப் பயன்படும்?

(1) குயவர்களுக்கு (2) மீனவர்களுக்கு (3) விவசாயிகளுக்கு

50. "உடையக்கூடிய பொருட்கள் உள்ளன." என்பதைக் குறிப்பதற்காகப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் குறியீடு எது?


(1)


(2)


(3)

51. மின்குமிழைக் கண்டு பிடித்த பெருமைக்குரியவர் யார்?

(1) அலெக்ஸாண்டர் கிரகாம் பெல்

(2) தோமஸ் அல்வா எடிசன்

(3) சேர் ஐசாக் நியூட்டன்

52. "ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு....."

இப்பாடல் எக்கிராமிய விளையாட்டுடன் தொடர்புபட்டது?

(1) கெந்தியடித்தல் (2) கிள்ளுப் பிராண்டி (3) கிட்டிப்புள்

53. தேசிய மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை **எடுக்காததன்** மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் தீமை எது?

(1) நாட்டின் தனித்துவம் பாதுகாக்கப்படுதல்

(2) உளச் சுகத்தை அனுபவிக்க முடிதல்

(3) பண்பாட்டுப் பெறுமானம் நாளுக்கு நாள் குறைதல்

54. தந்திகள் மூலம் நாதம் உண்டாகும் இசைக்கருவி எது?

(1) தம்புரா (2) புல்லாங்குழல் (3) மிருதங்கம்

[பக். 8 ஐப் பார்க்க


www.ikedu.lk

55. பாரமான பொருள் ஒன்றினை மேல்நோக்கி உயர்த்துவதற்கு A, B என்னும் இரண்டு சந்தர்ப்பங்களைக் காட்டும் இரு உருக்கள் அருகே தரப்பட்டுள்ளன. இதில் எந்த சந்தர்ப்பத்தில் பாரத்தை இலகுவாக உயர்த்த முடியும்?

(1) சந்தர்ப்பம் A மாத்திரம்

(2) சந்தர்ப்பம் B மாத்திரம்

(3) A, B ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களும்



சந்தர்ப்பம் A சந்தர்ப்பம் B

56. நீரை நுகரும்போது வீண்விரயமாகும் ஒரு சந்தர்ப்பம் எது?

(1) முகம் கழுவுவதற்கான நீரை ஒரு பாத்திரத்தில் இட்டுக்கொள்ளல்

(2) வீட்டுக் கழிவு நீரை பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தல்

(3) நீர்க்குழாயின் வாயிலைத் திறந்துவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடல்


57. உணவை நீண்ட காலம் பேணுவதற்குப் பயன்படுத்திய பண்டைய முறை, நவீன காலத்தில் பயன்படுத்தும் முறை என்பவற்றை ஒழுங்குமுறையில் குறிப்பிடும் விடை எது?

(1) உப்பு இடல், தேனிலிட்டு வைத்தல்

(2) தகரத்தில் அடைத்தல், உலர்த்துதல்

(3) மணலினுள் புதைத்தல், குளிரூட்டியில் வைத்தல்

58.



படங்களில் தரப்பட்டுள்ள போஞ்சி வித்துக்கள் அடங்கிய பாத்திரங்களைச் சில நாட்களின் பின்னர் அவதானித்த போது பாத்திரம் A இல் உள்ள வித்துக்கள் மாத்திரம் முளைத்திருக்கக் காணப்பட்டன. பாத்திரம் B இல் உள்ள வித்துக்கள் முளைக்காமைக்கான காரணம் யாது?

(1) நீர் கிடைக்காமை (2) வளி கிடைக்காமை (3) பசளை கிடைக்காமை

59. காலிக் கோட்டையை அமைத்தோர் யார்?

(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) ஆங்கிலேயர்

60. "எனது அன்பான பெற்றோர்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

***

www.lkedu.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

இறுதி வினாப்பத்திரம்

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

வினாத்தாள் இல. 7

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu


ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

2. ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான இரண்டு பொருட்கள் எவை?



(1) தொப்பியும் பந்தும் (2) வானொலியும் கட்டிலும் (3) வானொலியும் தொலைபேசியும்

3. பின்வரும் உருக்களில் காட்டப்படும் இசைக்கருவிகளை அவற்றுக்கிடையே உள்ள சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கத்தக்க முறை யாது?



A B C D


(1) A, B உம் C, D உம் (2) A, C உம் B, D உம் (3) A, D உம் B, C உம்


4. பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள விலங்கு வகைகளில் **இரண்டிற்கு மாத்திரம்** பொருத்தமான கூற்று யாது?



(1) நோய்களைப் பரப்பும். (2) நீரில் முட்டையிடும். (3) பூக்களில் தேன் பருகும்.

5. உருக் கோலத்தில் உள்ள வெற்றுக் கட்டத்துக்குப் பொருத்தமான உரு எது?






(1) (2) (3)

[பக். 3 ஐப் பார்க்க


சுட்டெண் :.....



6. 

வெறுமையான கட்டத்துக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

(1) 
(2) 
(3) 

7. கட்டத்தினுள் உள்ள உருக்களின் வரிசையில் அடுத்ததாக இடவேண்டிய உரு எது?



(1) 
(2) 
(3) 


8. பின்வருவனவற்றுள் எந்த இரண்டு வடிவங்களை இணைப்பதனால் செவ்வகம் ஒன்றைப் பெற முடியும்?




1 2 3 4




(1) 1 உம் 2 உம் (2) 1 உம் 4 உம் (3) 2 உம் 3 உம்

9. கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானியுங்கள்.



ஆகும் எனின்,  ..... ஆகும்.

வெற்றிடத்துக்குப் பொருத்தமான உரு எது?

(1) 
(2) 
(3) 

www.ikedu.lk

10. இலக்கங்களுக்குப் பதிலாக குறியீடுகளை இட்டு ஒன்பதாயிரத்து ஐந்நூற்று இரண்டு பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

9 5 0 2 → ★ ✠ ✦ ✱

இக்குறியீடுகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) ✱ ✦ ✠ ★ (2) ✦ ✱ ✠ ★ (3) ✠ ★ ✱ ✦

11.


8	4	
2	2	6
16	8	48

இந்த உருவில் உள்ள வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?

(1) 15 (2) 18 (3) 24

12. பழ வியாபாரி ஒருவர் ஒரு கூடையிலிருந்த பழங்களை இரு தொகுதிகளாகப் பிரித்து அதில் ஒரு தொகுதியை ஐந்து சம பகுதிகளாகப் பிரித்து ஐந்து பேருக்கு விற்பனை செய்தார். ஒருவருக்கு விற்பனை செய்த பழங்களின் எண்ணிக்கை ஐந்து எனின், கூடையிலிருந்த பழங்கள் எத்தனை?

(1) 50 (2) 60 (3) 70

13. 

இந்த வலையுருவை மடித்து ஒரு சதுரமுகியாகச் செய்யும்போது அது தோற்றும் விதம் யாது?

(1)  (2)  (3) 

14. "பண்டைக்கால மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான். இதனால் நோயின்றி நீண்டநாள் வாழ்ந்தான். ஆனால் இன்றைய நிலை என்ன? பெருகிவரும் தொழிற்சாலைகளும் வாகனங்களும் காற்றை மாசுபடுத்துகின்றன. அவற்றின் இரைச்சலால் செவிப்புலன்களும் பாதிக்கப்படுகின்றன. மாசடைந்த சுற்றுப்புறச் சூழலால் புதுப்புது நோய்கள் தோன்றுகின்றன."


மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களினால் உணர்த்தப்படுவது

(1) சூழல் மாசடைவதால் ஏற்படும் பாதிப்பு பற்றியதாகும்.


(2) பண்டைய மனிதனின் வாழ்வியல் பற்றியதாகும்.

(3) போக்குவரத்துச் சாதனங்கள் அதிகரித்துள்ளன என்பதாகும்.


15. பின்வரும் திண்மங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள முகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடை எது?



A



B



C

(1) A C B (2) B C A (3) C A B

16. வரிசையொன்றில் 15 பிள்ளைகள் நின்றனர். அந்த வரிசையின் பின்னாலிருந்து பார்க்கும்போது சுதர்ஷன் 6 ஆவது இடத்தில் நின்றான். அதற்கேற்ப வரிசையின் முன்னாலிருந்து பார்க்கும்போது சுதர்ஷன் எத்தனையாவது இடத்தில் நிற்பான்?


(1) 9 ஆவது இடத்தில் (2) 10 ஆவது இடத்தில் (3) 11 ஆவது இடத்தில்

[பக். 5 ஐப் பார்க்க


www.ikedu.lk

17. பின்வரும் உருவில் உள்ள எல்லா நிரைகளிலும் நிரல்களிலும் 1, 2, 3, 4, 5 என்னும் இலக்கங்கள் ஐந்தும் இருத்தல் வேண்டும். இதற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.


1	2	3	4	5
3		5	1	2
5				4
2	3	4	5	1
4	5	1	2	3




(1)





(2)



(3)

18. பின்வரும் எந்தப் பொருட் சோடி மேலிருந்து பார்க்கப்படும்போது  எனத் தோன்றும்?


(1)


(2)


(3)

19. பின்வரும் உருவில் உள்ள அட்டைத்தாள் துண்டைப் பார்க்க.




இம்முறிகோட்டின் வழியே ஆங்கில டபிள்யூ எழுத்து வடிவில் மடித்தால் பெறப்படும் உரு எது?


(1)



(2)


(3)


20. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?



(1) 7



(2) 8



(3) 9

21. ஒரு குடும்பத்தின் இளையவர் பின்வருமாறு கூறுகின்றார். "எனக்கு சகோதரர்களும் சகோதரிகளும் சம எண்ணிக்கையில் உள்ளனர்." அக்குடும்பத்தின் மூத்தவர் பின்வருமாறு கூறுகின்றார். "எனக்கு உள்ள சகோதரர்களின் எண்ணிக்கை சகோதரிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும்." அக்குடும்பத்தில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் யாவை?

(1) ஆண் பிள்ளைகள் 2 உம் பெண் பிள்ளைகள் 3 உம்

(2) ஆண் பிள்ளைகள் 3 உம் பெண் பிள்ளைகள் 2 உம்

(3) ஆண் பிள்ளைகள் 1 உம் பெண் பிள்ளைகள் 4 உம்

www.ikedu.lk


22. குறித்த ஒரு தினத்தில் நடைபெற்ற தமிழ்தினப் போட்டியொன்றில் கட்டுரைப் போட்டி மு.ப. 9.30 தொடக்கம் மு.ப. 11.00 வரையும் கவிதைப் போட்டி மு.ப. 10.15 தொடக்கம் மு.ப. 10.45 வரையும் பேச்சுப் போட்டி மு.ப. 10.30 தொடக்கம் மு.ப. 11.15 வரையும் நடைபெற்றன. மூன்று போட்டி நிகழ்ச்சிகளும் ஒன்றாக நடைபெற்ற நேரம் எவ்வளவு?

(1) 15 நிமிடங்கள் (2) 20 நிமிடங்கள் (3) 30 நிமிடங்கள்

23. சதுர வடிவம் உள்ள ஒரு தாள் உரு (1) இற் காணப்படுகின்றது. உரு (2) இற் காணப்படுகின்ற முறிந்த கோடுகள் வழியே தாள் மூன்று தடவைகள் மடிக்கப்படுகின்றது. அதன் பின்னர் உரு (3) இல் உள்ளவாறு மூன்றாவதாக மடிக்கப்பட்ட விளிம்பின் மேலே ஒரு சிறிய பகுதி வெட்டி அகற்றப்படுகின்றது.



உரு (1)



உரு (2)




உரு (3)

தாளை முற்றாக விரிக்கும்போது காணத்தக்க துவாரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 3 (3) 4

24. நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை எனின், நாளை மறு தினத்துக்கு அடுத்த நாள் என்ன கிழமை?

(1) புதன்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

25. 


தரப்பட்டுள்ள உருவத்தின் எதிரே முகம் பார்க்கும் கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. அதில் தெரியும் உருவத்தின் சரியான விம்பத்தைக் காட்டும் உரு எது?



(1)



(2)




(3)

26. சிறிய அளவிலான மரக்குற்றித் தொகுதிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கட்டமைப்பு ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள சிறிய அளவிலான மரக்குற்றிகள் எத்தனை?

(1) 18

(2) 20

(3) 24



27. நபர் ஒருவர் A என்னும் இடத்திலிருந்து கிழக்குத் திசை நோக்கி 100 மீற்றர் பயணஞ் செய்து இடப்பக்கம் திரும்பி 50 மீற்றர் பயணம் செய்கிறார். பின்னர் அங்கிருந்து மீண்டும் இடப்பக்கம் திரும்பி 100 மீற்றர் பயணஞ் செய்து B என்னும் இடத்தை அடைகிறார். அவர் பயணத்தை ஆரம்பித்த இடத்தை அடைவதற்கு இடப்பக்கம் திரும்பி மேலும் எத்தனை மீற்றர் செல்ல வேண்டும்?

(1) 50 மீற்றர் (2) 100 மீற்றர் (3) 250 மீற்றர்

[பக். 7 ஐப் பார்க்க

www.ikedu.lk

28. □ × □ = △

△ + △ = ○

○ × ○ = 64 எனின், □ + △ × ○ இன் பெறுமானம் யாது?

(1) 20 (2) 34 (3) 48

29. பின்வரும் சம்பவங்களை வாசிக்க.


A - பெண் குருவி முட்டைகளை அடைகாத்தது.
B - இரண்டும் ஒன்றாக உணவைத் தேடிக்கொண்டு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டின.
C - ஆண் குருவி முயற்சி செய்து ஒரு கூட்டைக் கட்டியது.
D - முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தன.
E - பெண் குருவி அங்கு பல முட்டைகளை இட்டது.


இச்சம்பவங்கள் மிகப் பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.


(1) B, C, A, E, D (2) C, E, A, D, B (3) E, A, B, D, C

30. 

இங்கு காணப்படுவது ஒரு பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவனுக்கு வழங்குவதற்கு தயார் செய்யப்பட்டிருந்த அன்பளிப்புப் பொதி வைக்கப்பட்டிருந்த முறையாகும். இப்பொதியை வைக்கக்கூடிய வேறு ஒரு முறையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)

31. மயூரன் படம் ஒன்றினைப் பார்த்து பின்வருமாறு கூறினான்.


"இந்தப் படத்தில் இருப்பவரின் தந்தை எனது அம்மாவின் தந்தை ஆகும்."

அவ்வாறானால் படத்தில் காணப்படுபவருக்கும் மயூரனுக்கும் இடையில் உள்ள உறவுமுறை யாது?

(1) மாமா (2) சிற்றப்பா (3) பாட்டன்

32. உருவில் காணத்தக்க சதுரங்களின் எண்ணிக்கை

(1) ஒன்பது ஆகும்.
(2) பன்னிரண்டு ஆகும்.
(3) பதினைந்து ஆகும்.



33. கொழும்பிலிருந்து புத்தளத்திற்குச் சென்ற ஒரு பேருந்து சில நகரங்களைக் கடந்து சென்ற விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

"அது சிலாபம் நகரத்தைக் கடந்து செல்வதற்கு முன்னர் மஹாவெவ நகரத்தைக் கடந்தது. அது சிலாபம் நகரத்தைக் கடந்து சென்ற பின்னர் மங்களஎலிய நகரத்தைக் கடந்து சென்றது."

பேருந்து புத்தளத்திலிருந்து கொழும்புக்கு அதே பாதையில் திரும்பி வரும்போது அந்நகரங்களைக் கடக்கும் ஒழுங்குமுறை யாது?


(1) சிலாபம், மங்களஎலிய, மஹாவெவ
(2) மங்களஎலிய, சிலாபம், மஹாவெவ
(3) மஹாவெவ, சிலாபம், மங்களஎலிய

[பக். 8 ஐப் பார்க்க


www.ikeou.lk

34.


A


B


C


D

மேலே தரப்பட்டுள்ள உருக்களில் இரண்டு சமச்சீர் அச்சுகளை **மாத்திரம்** வரையத்தக்க உருக்கள் எவை?

(1) A உம் D உம் (2) B உம் C உம் (3) B உம் D உம்

35. ஒரு வினா விடைப் போட்டியில் 10 வினாக்கள் கேட்கப்பட்டன. சரியாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படுவதோடு பிழையாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் கழிக்கப்படும். அதற்கேற்ப வினா விடைப் போட்டியில் 40 புள்ளிகளைப் பெற்ற ஒரு மாணவன் சரியாக விடையளித்த வினாக்கள் எத்தனை?

(1) 4 (2) 5 (3) 6


36. ஒரு விருந்தில் 5 பேர் கலந்து கொண்டனர். விருந்து நிறைவில் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரோடு கை குலுக்கிக் கொண்டனர். அங்கு எத்தனை கை குலுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்?


(1) 10 (2) 20 (3) 25


37. ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கு ஒரு முறை மணி ஒலிக்கும் கடிகாரம் ஒன்று சமந்தி மு.ப. 6.00 மணிக்குப் படிக்கத் தொடங்கியபோது முதலாவது முறையாக ஒலித்தது எனின், அது ஏழாவது தடவை ஒலிக்கும் நேரம் எது?

(1) மு.ப. 7.30 (2) மு.ப. 7.45 (3) மு.ப. 8.00

38. பழக்கடை ஒன்றில் உள்ள பழங்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.







பழக்கடையில் உள்ள பழங்களின் எண்ணிக்கை பற்றிய சரியான கூற்று எது?

(1) தோடம்பழங்களை விட அன்னாசிப் பழங்கள் குறைவாக உள்ளன.

(2) அன்னாசிப்பழங்களை விட பப்பாசிப் பழங்கள் அதிகமாக உள்ளன.

(3) அன்னாசிப்பழங்களை விட பப்பாசிப் பழங்கள் குறைவாக உள்ளன.

39. ஒரு பாத்திரத்தில் 1.5 லீற்றர் நீர் உள்ளது. அப்பாத்திரத்தின் அடியில் உள்ள ஒரு சிறிய துளையிலிருந்து ஒவ்வொரு நிமிடமும் 75 மில்லிலீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது. அதற்கேற்ப அப்பாத்திரம் முற்றாக வெறுமையாவதற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

(1) 15 நிமிடம் (2) 20 நிமிடம் (3) 25 நிமிடம்

40. 2012 இல் பிறந்த ஒருவர் எந்த நூற்றாண்டின் எத்தனையாவது தசாப்தத்தில் பிறந்தார்?

(1) 20 ஆம் நூற்றாண்டின் 2 ஆம் தசாப்தத்தில்

(2) 21 ஆம் நூற்றாண்டின் 1 ஆம் தசாப்தத்தில்

(3) 21 ஆம் நூற்றாண்டின் 2 ஆம் தசாப்தத்தில்

* * *

www.ikedu.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
(මුලුප් පුකාශනාධිකාරයයුක්තයි)
All Rights Reserved]

இறுதி வினாப்பத்திரம்

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

வினாத்தாள் இல. 7

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

[பக். 2 ஐப் பார்க்க


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

தலதா மாளிகை வரலாற்றுச் சிறப்பு மிக்கதொரு பௌத்த விகாரையாகும். இங்கே புத்தரின் புனிதத் தந்தம் வெகு கௌரவமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இங்கு ஆண்டுக்கு ஒரு தடவை ஆடி மாதத்தில் 'எசல பெரஹரா' நடைபெறும். பெரஹரா ஊர்வலத்தின்போது, சிலர் சவுக்குகளை வீசிய வண்ணம் வருவார்கள். அவர்களுக்குப் பின்னால் ஆலவட்டம், கொடிகள், குடைகள் சகிதம் சிலர் வரிசையாக வருவார்கள். இவர்களைத் தொடர்ந்து பல்வேறு நடனக்காரர்கள் நடனமாடியபடி வருவார்கள். இவ்வாறாகப் புத்தரின் தந்தத்தைக் கொண்ட தங்கப்பேழையைச் சுமந்த வண்ணம் கொம்பன் யானை வலம் வரும். யானைப் படை புடைசூழ, பட்டுக் குடை நிழல் தர, பல வண்ண மின்விளக்குகள் ஒளி தர, பளபளவென மின்னும் தங்கப்பேழை ஒரு தனியழகுதான். இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட பெரஹராக் காட்சியை நாமும் கண்டுகளிப்போம்.

● **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) புத்தரின் புனிதத் தந்தம் வெகு கௌரவமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இடம் எது?

.....

(ii) சவுக்குகளை வீசிய வண்ணம் வருபவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் யாவர்?

.....

(iii) பெரஹரா ஊர்வலத்தின்போது கொம்பன் யானை சுமந்து வருவது எதை?

.....

(iv) 'வெளிச்சம்' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லினை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

.....

(v) பந்தியில் இடம்பெற்றுள்ள இரட்டைக்கிளவிச் சொல் ஒன்றை எழுதுக. .....

(vi) 'தங்கப்பேழை' என்பதைப் பிரித்து எழுதுக. .....

2. கீழே தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான மரபுச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) பல்லி : ..... (சொல்லும் / கத்தும்)

(ii) ஆந்தை : ..... (உறுமும் / அலறும்)

3. பின்வரும் பழமொழிகளின் கருத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

(i) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.


.....

(ii) சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.

.....

4. கீழே தரப்பட்டுள்ள புதிரில் ஒளிந்திருக்கும் எழுத்துக்களைக் கொண்டு **ஆக்கக்கூடிய** சொல்லை எழுதுக. முதலெழுத்து வட்டத்தில் உண்டு கட்டத்தில் இல்லை. இரண்டாவது எழுத்து பங்கத்தில் உண்டு பக்கத்தில் இல்லை. மூன்றாவது எழுத்து கிளியில் உண்டு ஒளியில் இல்லை. : .....

5. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரைப் பூர்த்தி செய்க.



இடமிருந்து வலம்:

1. இரவு எனும் சொல்லின் எதிர்க் கருத்து
3. பாத்திரம் எனும் சொல்லின் ஒத்த சொல் (பக்கம் மாறிவரும்)

மேலிருந்து கீழ்:

1. திரையரங்குகளில் பார்ப்பது
2. உப்பு நீர் காணப்படும் நீர்நிலை (தலை கீழாக உள்ளது)

[பக். 3 ஐப் பார்க்க

www.ikeau.lk

சுட்டெண் :.....

6. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை **எனும் திருக்குறளைப் பூர்த்தி செய்க.**

....."

7. பின்வரும் **சொற்களில் பொருத்தமானதைத்** தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

ஆடினேன், பாடுவாய், நீங்கள், நாங்கள், வாடுகின்றது, பறக்கின்றன

(i) முன்னிலைப் பன்மைப் பெயர்ச்சொல் : .....

(ii) படர்க்கைப் பன்மை நிகழ்கால வினைச்சொல் : .....

(iii) உயர்திணை ஆண்பால் இறந்தகால வினைச் சொல் : .....

8. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **அறிவித்தலா? அறிவுறுத்தலா? கட்டளையா?** எனத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) வீதியின் வலது பக்கம் நடந்து செல்க. (அறிவித்தல் / அறிவுறுத்தல் / கட்டளை)

(ii) முன்னோக்கி வாருங்கள். (அறிவித்தல் /அறிவுறுத்தல் / கட்டளை)

9. பின்வரும் சுருக்கக் குறியீடுகளை **விரித்து** எழுதுக.

(i) த.பெ.இ : .....

(ii) பா.அ.ச . : .....

10. பின்வரும் **இணைமொழியைப் பூர்த்தி** செய்க.

கையும்.....


11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

(i) Duster : ..... (ii) Clouds : .....

12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைக் கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துகளில் எழுதுக.

(i) 

M					e	

(ii) 

A				p				

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக **ஒழுங்குபடுத்தி** கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) your / Is / pencil? / this : .....

(ii) canteen / to / I / going / am / the : .....

14. 'வத்துர' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக. : .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

உங்கள் பெயர் என்ன? : .....

www.lkedu.lk

16. 'பதின்மூவாயிரத்து எண்பத்தைந்து' இந்த எண்ணை இலக்கத்தில் எழுதுக. : .....

17. பின்வரும் எண்ணை இடப்பெறுமானத்திற்கு அமைய விரித்து எழுதுக.

9435 = ... + ... + ... + ...

18. எண்கோலத்துக்கேற்ப வெற்றிடங்களில் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக.

75 , 83 , 91 , 99 , ... , ... ,

19.

9		3
	6	

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?


: .....

20. 12 மணித்தியாலக் கடிகாரத்தின் நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.

	12 மணித்தியாலக் கடிகார நேரம்	24 மணித்தியாலக் கடிகார நேரம்
(i)	மு.ப. 4.15	.....
(ii)	பி.ப. 3.20	.....

21. 318 பென்சில்களை ஒரு பிள்ளைக்கு 3 வீதம் எத்தனை பிள்ளைகளுக்கு வழங்கலாம்?

: .....

22. 

உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.

: .....

23. இரு பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

	விஜய வித்தியாலயம்	கெமுனு வித்தியாலயம்
ஆண்	1357	2526
பெண்	3145	1898

(i) இரு பாடசாலைகளிலும் கற்கும் ஆண் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

(ii) விஜய வித்தியாலயத்தில் கற்கும் ஆண், பெண் மாணவர்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடு யாது?

: .....

24. விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட 8 லீற்றர் 500 மில்லிலீற்றர் தேங்காய்யெண்ணெயில் இருந்து 2 லீற்றர் 900 மில்லிலீற்றர் தேங்காய்யெண்ணெய் எஞ்சியிருந்தது. விற்பனையாகிய தேங்காய்யெண்ணெயின் அளவு யாது?

: ..... l ..... ml

25. கூட்டுக. :

	Kg	g
	4	250
+	5	825
	.....	

26. இரு வட்ட முகங்கள் உள்ள திண்மம் யாது? : .....

[பக். 5 ஐப் பார்க்க

www.lkedu.lk


27. ஒருவர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாம் நாளில் 32 km 400 m தூரமும் இரண்டாம் நாளில் 27 km 700 m தூரமும் சென்றுள்ளார். அவர் இரு நாட்களின் இறுதியிலும் சென்ற மொத்தத் தூரம் யாது?

: ..... km ..... m

28. 490 ரூபாய்க்கு ஓர் உணவுப் பெட்டியையும் 350 ரூபாய்க்கு இரண்டு பென்சிற் பெட்டிகளையும் வாங்கிய பின்னர் 1000 ரூபாய்த் தாளினைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதி யாது?

: ரூபாய் .....

29. ஒரு குறித்த மாணவர் குழுவிடம் அவர்கள் விரும்பும் உணவு வகைகள் பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் பின்வரும் வரைபிலே காட்டப்பட்டுள்ளன.



(i) மாணவர்கள் சமமான எண்ணிக்கையில் விரும்பும் இரு உணவு வகைகளும் யாவை?

:.....

(ii) கடலையை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க தோசையை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு கூடுதலானது?

:.....

● **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு எது?

(1) நீர்ப்பாம்பு (2) மள்புஞட்டா (3) மரநாய்

31. வெடித்தல் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட தாவரம்

(1) சோளம் (2) வெண்டி (3) எண்ணை

32. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் விலங்குகள் மாத்திரம் இடம்பெறும் விடை எது?

(1) மயிர்கொட்டி, நத்தை, மாடு (2) மண்புழு, கிளி, தும்பி (3) ஆமை, முயல், தேனீ

33. பின்வரும் எந்தப் பாத்திரத்தில் இடப்படும் பனிக்கட்டி விரைவாக உருகும்?

(1) சாதாரண நீரைக் கொண்ட கண்ணாடிக் குவளை

(2) வெந்நீரைக் கொண்ட கண்ணாடிக் குவளை

(3) குளிர்ந்த நீரைக் கொண்ட கண்ணாடிக் குவளை

34. களனிப் பள்ளத்தாக்குப் புகையிரதப் பாதை எவ்விரு நகரங்களுக்கு இடைப்பட்டது?

(1) கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரை

(2) கொழும்பிலிருந்து மாத்தறை வரை

(3) கொழும்பிலிருந்து அவிசாவளை வரை

35. "வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது பயன்பெற வேண்டும்." என்னும் கூற்றினைக் கூறிய மன்னன் யார்?

(1) தாதுசேனன் (2) மகாசேனன் (3) பராக்கிரமபாகு

www.ikeduk

36. பொதி செய்யப்பட்டு விற்கப்படும் பொருள் ஒன்றின் மேலுறையில் அப்பொருள் அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதைக் காட்டும் அடையாளமாக அச்சிடப்பட்டிருப்பது

(1) காலாவதியாகும் திகதி

(2) தரச் சின்னம் SLS / ISO முத்திரை

(3) பொருள் உற்பத்தி செய்யப்பட்ட திகதி

37. ஊசித்துளைக் கமராவொன்றைச் செய்யும்போது எதன் மத்தியில் குண்டூசியால் துளையொன்றை இடல் வேண்டும்?

(1) கறுப்பு நிறத்தாள் (2) ரிசூத்தாள் (3) பற்பசை பெட்டி

38. பாதசாரிகள் பெருந்தெருக்களில் நடந்து செல்லும்போது **செய்யத்தகாத** ஒரு செயல் எது?

(1) கைத்தொலைபேசியில் உரையாடிய படி செல்லுதல்

(2) வெள்ளைக் குறுக்குக்கோடு இடப்பட்ட பகுதியால் வீதியைக் கடத்தல்

(3) வீதிச் சமிக்ஞை விளக்கில் பச்சைநிற மனித உருவம் தெரியும்பொழுது வீதியைக் கடத்தல்

39. கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நாட்டைப் பொறுப்பேற்க உதவும் வகையில் பூரணமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கியவர்

(1) கலாநிதி. ரீ.பீ. ஜாயா

(2) கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி

(3) கலாநிதி. சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா


40. எமது நாட்டின் பெருமையையும் தனித்துவத்தையும் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் தேசியக் குறியீடு **அல்லாதது** எது?



(1)



(2)



(3)

41. பிறர் கருத்துக்கள், நடத்தைகள் ஆகியவற்றின்போது முரண் ஏற்படாதவாறு துலங்கலைக் காட்டுவதால் ஏற்படும் ஒரு நன்மை

(1) நட்பை தொடர்ச்சியாகப் பேண முடியாதிருத்தல்

(2) முரண்களை மேலும் வளர்த்தல்

(3) சமூகத்தில் நல்ல ஒருவராகத் திகழ்தல்

42. 'பெரிய வியாழனன்று சீடர்களின் பாதந் தோய்த்தல்' எவ்வினத்தவரின் நீருடன் பிணைந்த கலாசாரப் பழக்கம்?

(1) முஸ்லிம்கள் (2) கத்தோலிக்கர்கள் (3) பௌத்தர்கள்

43. எரிவாயுக் கசிவு ஏற்பட்டால் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன?

(1) வீட்டின் யன்னல் கதவுகளைத் திறந்துவிடல்

(2) மின்குமிழை ஒளிரச் செய்தல்

(3) தீயை மூட்டி அடுப்பை பற்றவைத்தல்

44. கல்சியம் அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவு எது?

(1) நிலக்கடலை (2) எள்ளு (3) உழுந்து

[பக். 7 ஐப் பார்க்க

www.ukedu.lk

45. இலங்கைத் தேசியக்கொடியில் சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்க உருவம் எவ்வினத்தவரைக் குறிக்கின்றது?

(1) சிங்கள மக்களை (2) தமிழ் மக்களை (3) முஸ்லிம் மக்களை

46. உயர் குருதியமுக்கம், இதயநோய், பருத்த உடல் ஆகிய நோய்கள் ஏற்பட ஏதுவாகத்தக்க காரணங்கள் இடம்பெறும் விடை எது?

(1) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகளவில் உண்ணல்

(2) உடன் உணவுகள், மிளகாய் அதிகம் அடங்கிய உணவுகளை உட்கொள்ளல்

(3) இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகளை அதிகம் உண்ணுதல்

47. சூரியக் குடும்பத்தில் சிவப்பு நிறத்தில் உள்ள கோள் எது?

(1) செவ்வாய் (2) புதன் (3) வெள்ளி

48. சுத்தியல், குறடு ஆகியவற்றினால் செய்யப்படும் வேலைகள் முறையே யாவை?

(1) போத்தல் மூடியைத் திறத்தல், ஆணியைக் கழற்றுதல்


(2) யாதாயினும் ஒன்றை இறுக்கமாகப் பிடித்தல், போத்தல் மூடியைத் திறத்தல்

(3) ஆணியைக் கழற்றுதல், யாதாயினும் ஒன்றை இறுக்கமாகப் பிடித்தல்

49. பூக்களில் கேசரங்கள் உள்ளனவா என அவதானிப்பதற்கு மிகப் பொருத்தமான உபகரணம் எது?

(1) கைவில்லை (2) திசைகாட்டி (3) தொலைகாட்டி

50.



எமது நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த உருவில் உள்ளவர் யார்?

(1) கேர்ணல் ஒல்கொட்

(2) ஆதர் சீ. கிளாக்

(3) அனகாரிக தர்மபால


51. வெவ்வேறு வடிவங்களும் ஒரே கொள்ளளவும் கொண்ட ஊடுகாட்டத்தக்க பாத்திரங்களில் நீரை நிரப்பி செய்யத்தக்க பரிசோதனையில் நீரின் எவ்வியல்பு தொடர்பாகப் பரிசோதிக்கப்பட்டது?

(1) நீருக்கு மணமோ, நிறமோ இல்லை என்பது

(2) நீருக்கு சுவை இல்லை என்பது

(3) நீருக்கு திடமான வடிவம் இல்லை என்பது

52. படத்தில் காட்டியுள்ள ஆக்கத்தில் காகித வண்ணத்துப்பூச்சியின் தலையில் மேலிருந்து கீழாக குத்தி நிறுத்தப்பட்டுள்ள குண்டூசிக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய வேறு பொருள் எது?



(1) ஈயக் கம்பித் துண்டு

(2) இரும்புக் கம்பித் துண்டு

(3) செப்புக் கம்பித் துண்டு


53. பாடசாலையில் நிகழும் சகல முக்கிய நிகழ்வுகளையும் குறித்துக் கொள்ளும் புத்தகம்

(1) தினவரவு இடாப்பு (2) பொருட்பதிவேடு (3) சம்பவத்திரட்டுப் புத்தகம்


[பக். 8 ஐப் பார்க்க

www.ikedu.lk


54. உப்புக் கரைத்த நீர் உள்ள கண்ணாடிக் குவளையினுள் புதிய முட்டை ஒன்றை இடும்போது அது ஓய்வடைந்த பின்னர் காணப்படும் விதத்தைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

55. அறுவடை செய்த விளைபொருளைப் பூச்சிகளின் தாக்கத்திலிருந்து தவிர்ப்பதற்காக பயன்படுத்தப்படுவது

(1) வேப்பிலைச்சாறு (2) மாவிலைச்சாறு (3) கத்தரியிலைச்சாறு

56. படத்தில் காட்டியுள்ள வீதிச் சைகையினால் கூறப்படும் செய்தி யாது?



(1) வழுக்கும் வீதி முன்னால்

(2) அபாயகரமான சரிவு முன்னால்

(3) முன்னால் வழி விடவும்

57. பின்வருவனவற்றுள் பாதுகாப்பான சந்தர்ப்பம் எது?

(1) வெள்ளம் ஏற்பட்டுள்ளபோது வெள்ள நீரில் நீராடச் செல்லல்

(2) மின்னல் மின்னும் வேளைகளில் திறந்த வெளியில் சஞ்சரித்தல்

(3) புகையிரதக் கடவை உள்ள புகையிரதப் பாதையைக் கடந்து செல்லல்

58. வீட்டில் நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்த தையல் இயந்திரத்தை மீளவும் இயங்க வைப்பதற்கு முன் செய்ய வேண்டியது யாது?

(1) இயந்திரத்திற்கு புதிய தையல் ஊசியைப் பொருத்துதல்

(2) இயந்திரத்தின் சுழலுமிடங்களில் எண்ணெய் இடல்

(3) இயந்திரத்தின் மீது படிந்துள்ள தூசுகளைத் துடைத்தல்

59. நோய்க் காவிகளான ஆட்கள் மூலம் பரவும் நோய் எது?

(1) மலேரியா (2) கொலரா (3) சின்னமுத்து

60. "மழை பெய்யும்போது சுற்றாடலில் ஏற்படும் அழகு" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

***

www.ikeduuk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

பத்திரம் - I

1. (2)	**2.** (2)	**3.** (1)	**4.** (2)	**5.** (1)	**6.** (3)	**7.** (2)	**8.** (3)	**9.** (2)	**10.** (1)
11. (3)	**12.** (3)	**13.** (2)	**14.** (3)	**15.** (3)	**16.** (1)	**17.** (3)	**18.** (1)	**19.** (2)	**20.** (2)
21. (1)	**22.** (2)	**23.** (1)	**24.** (2)	**25.** (1)	**26.** (1)	**27.** (2)	**28.** (3)	**29.** (2)	**30.** (2)
31. (2)	**32.** (3)	**33.** (2)	**34.** (3)	**35.** (2)	**36.** (3)	**37.** (1)	**38.** (3)	**39.** (1)	**40.** (2)

(40 x 2½ = 100 புள்ளிகள்)

பத்திரம் - II

1. (i) கிளித்தட்டு, சடுகுடு, பல்லாங்குழி (ii) விளையாட இறங்கும் அணியினரை (iii) அகலக் கோட்டில்
(iv) குறைந்தது (v) நான்கு (vi) செவ்வகம் ஒன்று **(1x6 = 6 புள்ளிகள்)**

2. (i) இளநீர் அருந்துதல் உடலுக்கு நன்மையைத் தருகின்றது.
(ii) விவசாயி நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கின்றான். **(1x2 = 2 புள்ளிகள்)**

3. பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது. **(2 புள்ளிகள்)**

4. எமக்குப் பலவகையிலும் பயன்படும் மரங்களை வளர்த்துக் காப்பது நம் கடமையாகும். **(2 புள்ளிகள்)**

5. சூரியன், சந்திரன், அக்கினி என்பன முச்சுடர்களாகும். **(1 புள்ளி)**

6. (i) பேச்சை விரித்தல் (ii) சொன்ன சொல் தவறுதல் **(1x2 = 2 புள்ளிகள்)**

7. (i) x (ii) ✓ (iii) x **(1x3 = 3 புள்ளிகள்)**

8. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். **(1 புள்ளி)**

9. (i) ஆடிப் பாடி (ii) கட்டித் தழுவி **(1x2 = 2 புள்ளிகள்)**

10. தங்கைமார் காலை உணவை உண்டனர். **(1 புள்ளி)**

11. (i) வைத்தியர் (ii) நீர்வீழ்ச்சி **(1x2 = 2 புள்ளிகள்)**

12. (i) | E | l | e | p | h | a | n | t | (ii) | P | i | n | e | a | p | p | l | e | **(1x2 = 2 புள்ளிகள்)**

13. (i) I am reading a book. (ii) What is this vegetable? **(1x2 = 2 புள்ளிகள்)**

14. தங்கை **(1 புள்ளி)**

15. வேலாவ கீயத? கியன்ன. **(1 புள்ளி)**

16. 5072 **(2 புள்ளிகள்)**

17. இரண்டாயிரத்து முந்நூற்றுப் பதினைந்து **(2 புள்ளிகள்)**

18. 29, 36 **(2 புள்ளிகள்)**

19. 9 **(2 புள்ளிகள்)**

20. (i) 8 (ii) 16 **(1x2 = 2 புள்ளிகள்)**

21. 0.4 **(2 புள்ளிகள்)**

22. 5 l 850 ml **(2 புள்ளிகள்)**

23. 4 m 25 cm **(2 புள்ளிகள்)**

24. மு.ப. 7.10 **(2 புள்ளிகள்)**

25. (i) C (ii) 6693 **(2x2 = 4 புள்ளிகள்)**

26. 2 kg 250 g **(2 புள்ளிகள்)**

27. 416/-, 416.00 **(2 புள்ளிகள்)**

28. நான்முகி **(2 புள்ளிகள்)**

29. (i) 14 (ii) 3 **(2x2 = 4 புள்ளிகள்)**

30. (3)	**31.** (2)	**32.** (3)	**33.** (2)	**34.** (1)	**35.** (2)	**36.** (1)	**37.** (3)	**38.** (1)	**39.** (2)
40. (3)	**41.** (2)	**42.** (3)	**43.** (1)	**44.** (3)	**45.** (3)	**46.** (1)	**47.** (1)	**48.** (3)	**49.** (1)
50. (1)	**51.** (3)	**52.** (2)	**53.** (3)	**54.** (1)	**55.** (2)	**56.** (3)	**57.** (1)	**58.** (3)	**59.** (3)

(30 - 59 வரை) (1x30 = 30 புள்ளிகள்)

60. காட்சிப் படத்தில் உள்ளவற்றை விபரித்து நிகழ்காலத்தில் எழுதப்பட்டுள்ள பொருத்தமான முதல் மூன்று வாக்கியங்களுக்கு மட்டும் புள்ளி வழங்குக. **(3x2 = 6 புள்ளிகள்)**

- முழு விடைத்தாளையும் கருத்திற் கொண்டு உறுப்பெழுத்துக்கு 02 புள்ளிகள் வழங்குக.

❊ ❊ ❊

www.ikgau.lk

பத்திரம் - I

1. (3)	**2.** (2)	**3.** (3)	**4.** (1)	**5.** (3)	**6.** (1)	**7.** (3)	**8.** (2)	**9.** (1)	**10.** (3)
11. (2)	**12.** (2)	**13.** (1)	**14.** (2)	**15.** (2)	**16.** (1)	**17.** (2)	**18.** (3)	**19.** (1)	**20.** (2)
21. (3)	**22.** (1)	**23.** (2)	**24.** (3)	**25.** (3)	**26.** (3)	**27.** (2)	**28.** (3)	**29.** (3)	**30.** (2)
31. (3)	**32.** (2)	**33.** (2)	**34.** (1)	**35.** (3)	**36.** (3)	**37.** (2)	**38.** (3)	**39.** (3)	**40.** (2)

(40 x 2½ = 100 புள்ளிகள்)

பத்திரம் - II

1. (i) விவசாயி (ii) சேவகர்கள் (iii) அரசர், மன்னர் (iv) செலவு (v) நான்
(vi) "அந்த ஆடுகளுக்குச் சொந்தக்காரர் யார் என்று கண்டுபிடியுங்கள். உடனே அவரை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்." **(1x6 = 6 புள்ளிகள்)**

2. (i) பல்லுக் (ii) குப்பையிற் **(1x2 = 2 புள்ளிகள்)**

3. சுற்றுலாப் பயணிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட்டனர். **(1 புள்ளி)**

4. (i) உடன் மறைதல் (ii) மிகவும் அரிதாக **(1x2 = 2 புள்ளிகள்)**

5. (i) நான் நண்பியின் வீட்டிற்குச் செல்வேன்.
(ii) அவரது மருமகள் வெளிநாட்டில் வசிப்பார். **(1x2 = 2 புள்ளிகள்)**

6. (i) கப்பம் (ii) கைம்மருந்து (iii) மஞ்சரி **(1x3 = 3 புள்ளிகள்)**

7. (i) பிழை (ii) சரி **(1x2 = 2 புள்ளிகள்)**

8. (i) பாலிலிருந்து தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றைப் பெறுகின்றோம்.
(ii) ஐயா! உங்களுக்கு நீச்சல் தெரியுமா? **(1x2 = 2 புள்ளிகள்)**

9. பேத்தை **(1 புள்ளி)**

10. (i) கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி (ii) 9 நாட்கள்
(iii) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் கொழும்பு - 07 **(1x3 = 3 புள்ளிகள்)**

11. (i) இலைகள் (ii) பாம்பு **(1x2 = 2 புள்ளிகள்)**

12. (i) Parrot (ii) Comb **(1x2 = 2 புள்ளிகள்)**

13. (i) I am going to Colombo. (ii) That is a coconut tree. **(1x2 = 2 புள்ளிகள்)**

14. அதிபர் **(1 புள்ளி)**

15. கொக்கா சுது பாட்டாய். **(1 புள்ளி)**

16. 8431 **(1 புள்ளி)**

17. (i) ix (ii) $\frac{6}{10} / \frac{3}{5}$ **(1x2 = 2 புள்ளிகள்)**

18. (i) கனவுரு (ii) நான்முகி **(1x2 = 2 புள்ளிகள்)**

19. 1960 **(2 புள்ளிகள்)**

20. 243 **(2 புள்ளிகள்)**

21. 12 **(2 புள்ளிகள்)**

22. (i) 2 மணித்தியாலம் 45 நிமிடம் (ii) 17 : 30 **(2x2 = 4 புள்ளிகள்)**

23. 130 **(2 புள்ளிகள்)**

24. 4 kg 350 g **(2 புள்ளிகள்)**

25. (i) 36.00 (ii) 4 (iii) 80.00 **(1x3 = 3 புள்ளிகள்)**

26. 1 *l* 700 *ml* **(2 புள்ளிகள்)**

27. 14 m 30 cm **(2 புள்ளிகள்)**

28. தென்கிழக்கு / அக்கினிமூலை **(2 புள்ளிகள்)**

29. (i) 215 km (ii) அனுராதபுரத்திலிருந்து - பதுளை **(1x2 = 2 புள்ளிகள்)**

30. (2)	**31.** (3)	**32.** (1)	**33.** (2)	**34.** (3)	**35.** (1)	**36.** (3)	**37.** (2)	**38.** (1)	**39.** (3)
40. (1)	**41.** (1)	**42.** (3)	**43.** (2)	**44.** (3)	**45.** (2)	**46.** (3)	**47.** (2)	**48.** (1)	**49.** (3)
50. (3)	**51.** (2)	**52.** (3)	**53.** (3)	**54.** (1)	**55.** (2)	**56.** (3)	**57.** (3)	**58.** (2)	**59.** (1)

(30 - 59 வரை) (1x30 = 30 புள்ளிகள்)

60. பெற்றோரின் அன்பு பற்றி எழுதப்பட்டுள்ள பொருத்தமான முதல் மூன்று வாக்கியங்களுக்கு மட்டும் புள்ளி வழங்குக. **(3x2 = 6 புள்ளிகள்)**

- முழு விடைத்தாளையும் கருத்திற் கொண்டு உறுப்பெழுத்துக்கு 02 புள்ளிகள் வழங்குக.

* * *

www.ikeau.lk

அறிவுமதி

புள்ளி வழங்கும் திட்டம்
வினாத்தாள் இல - 7

5

பத்திரம் - I

1. (1)	**2.** (3)	**3.** (2)	**4.** (3)	**5.** (2)	**6.** (1)	**7.** (3)	**8.** (2)	**9.** (2)	**10.** (1)
11. (3)	**12.** (1)	**13.** (1)	**14.** (1)	**15.** (3)	**16.** (2)	**17.** (2)	**18.** (3)	**19.** (1)	**20.** (2)
21. (2)	**22.** (1)	**23.** (3)	**24.** (3)	**25.** (3)	**26.** (2)	**27.** (1)	**28.** (2)	**29.** (2)	**30.** (1)
31. (1)	**32.** (3)	**33.** (2)	**34.** (1)	**35.** (2)	**36.** (1)	**37.** (1)	**38.** (3)	**39.** (2)	**40.** (3)

(40 x 2½ = 100 புள்ளிகள்)

பத்திரம் - II

1. (i) தலதா மாளிகை (ii) ஆலவட்டம், கொடிகள், குடைகள் சகிதம் சிலர் வரிசையாக வருவார்கள்.
(iii) தங்கப்பேழை (iv) ஒளி (v) பளபள (vi) தங்கம் + பேழை **(1x6 = 6 புள்ளிகள்)**

2. (i) சொல்லும் (ii) அலறும் **(1x2 = 2 புள்ளிகள்)**

3. (i) தீமை செய்தால் தீமை வரும். (ii) உடல் வலிமை அவசியம். **(1x2 = 2 புள்ளிகள்)**

4. வங்கி **(1 புள்ளி)**

5.

1 ப	க	2 ல்
ட		ட
3 ம்	ல	க

(1x4 = 4 புள்ளிகள்)

6. செய்ந்நன்றி கொன்ற மகற்கு **(1 புள்ளி)**

7. (i) நீங்கள் (ii) பறக்கின்றன (iii) ஆடினேன் **(1x3 = 3 புள்ளிகள்)**

8. (i) அறிவுறுத்தல் (ii) கட்டளை **(1x2 = 2 புள்ளிகள்)**

9. (i) தபால் பெட்டி இலக்கம் (ii) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் **(1x2 = 2 புள்ளிகள்)**

10. மெய்யும் **(1 புள்ளி)**

11. (i) அழிப்பான் (ii) மேகங்கள் **(1x2 = 2 புள்ளிகள்)**

12. (i) M a n g o e s (ii) A e r o p l a n e **(1x2 = 2 புள்ளிகள்)**

13. (i) Is this your pencil? (ii) I am going to the canteen. **(1x2 = 2 புள்ளிகள்)**

14. தண்ணீர் / நீர் **(1 புள்ளி)**

15. ஒபகே நம குமக்த? **(1 புள்ளி)**

16. 13085 **(1 புள்ளி)**

17. 9000 + 400 + 30 + 5 **(1 புள்ளி)**

18. 107, 115 **(2 புள்ளிகள்)**

19. 594 **(2 புள்ளிகள்)**

20. (i) 04 : 15 (ii) 15 : 20 **(1x2 = 2 புள்ளிகள்)**

21. 106 **(2 புள்ளிகள்)**

22. 0.6 **(2 புள்ளிகள்)**

23. (i) 3883 (ii) 1788 **(2x2 = 4 புள்ளிகள்)**

24. 5 l 600 ml **(2 புள்ளிகள்)**

25. 10 kg 075 g **(2 புள்ளிகள்)**

26. உருளை **(2 புள்ளிகள்)**

27. 60 km 100 m **(2 புள்ளிகள்)**

28. 160/-, 160.00 **(2 புள்ளிகள்)**

29. (i) கடலை, இடியப்பம் (ii) 9 **(2x2 = 4 புள்ளிகள்)**

30. (3)	**31.** (2)	**32.** (1)	**33.** (2)	**34.** (3)	**35.** (3)	**36.** (2)	**37.** (1)	**38.** (1)	**39.** (1)
40. (3)	**41.** (3)	**42.** (2)	**43.** (1)	**44.** (2)	**45.** (1)	**46.** (1)	**47.** (1)	**48.** (3)	**49.** (1)
50. (2)	**51.** (3)	**52.** (2)	**53.** (3)	**54.** (3)	**55.** (1)	**56.** (1)	**57.** (3)	**58.** (2)	**59.** (3)

(30 - 59 வரை) (1x30 = 30 புள்ளிகள்)

60. மழை பெய்யும்போது சுற்றாடலில் ஏற்படும் அழகு பற்றி எழுதப்பட்டுள்ள பொருத்தமான முதல் மூன்று வாக்கியங்களுக்கு மட்டும் புள்ளி வழங்குக. **(3x2 = 6 புள்ளிகள்)**

- முழு விடைத்தாளையும் கருத்திற் கொண்டு உறுப்பெழுத்துக்கு 02 புள்ளிகள் வழங்குக.

* * *

www.tredu.lk